# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.111/2019

Deposition of witness for Prosecution – PW19

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரவி | Caste | : | |
| S/o. | : | கனகசபை | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed on 18.08.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

A1 to A3 present.

**முதல் விசாரணை:**

நான் 2019ம் ஆண்டு சங்ககிரி காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி பணி ஓய்வு பெற்று சேலம் சின்னதிருப்பதியில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 19.05.2018ம் தேதி 00.30 மணிக்கு சங்ககிரி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக நிலைய அலுவலில் இருந்தபோது சங்ககிரி சரகத்திற்கு உட்பட்ட காளிப்பட்டி பிரிவு, வைகுந்தத்தை சார்ந்த ரமேஷ், த/பெ.சின்னசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து

மூலமான புகாரை பெற்று நிலைய குற்ற எண்.196/2018 இதச பிரிவு 302 ஆக வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசலை நீதித்துறை நடுவர் எண்.1 சங்ககிரி அவர்களுக்கு விரைவு தபால் மூலம் தலைமை காவலர் 841–திரு.பிரேம்நாத் மூலம் அனுப்பி வைத்தேன். மேற்படி வழக்கு கோப்புகளை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். மேற்படி வழக்கு கோப்பை விசாரணைக்காக வேண்டி சங்ககிரி காவல் வட்ட ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். புகார் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

காவல் நிலையத்திலிருந்து காளிப்பட்டி பிரிவு ரோடு எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் சுமார் 8 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. புகார்தாரர் தனக்கு 10 மணிக்கு தெரிந்த விசயத்தை இரண்டரை மணி நேரம் கழித்து தாமதமாக காவல் நிலையத்தில் தகவல் சொன்னதற்கான காரணம் என்று விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

புகாரை பதிவு செய்து அது சம்மந்தமாக நான் முதல் கட்ட விசாரணை செய்தேனா என்றால் இல்லை. புகாரை யார் எழுதினார்கள் என்றால் தெரியாது. 00.30 மணிக்கு நான் புகாரை வாங்கிய உடன் நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிட்டேன் என்றால் சரி. சம்பவ இடத்திற்கு போலிசார் எத்தனை மணிக்கு சென்றார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. இரவு 10.00 மணிக்கே சம்பவ இடத்திற்கு போலிசார்

சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக புகார்தாரரிடம் பொய்யாக புகார் மனுவை வாங்கி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.